மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண்.42/2022

பெயர் – ஞானம்மாள் (வா.சா.1)

நாள் – 19.06.2024

13 ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

இந்த வழக்கை நான் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகம் கோரி தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் உள்ள பிரதிவாதிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவு என்றால் வீரபுத்திரன் எனது அக்கா வேல்தாய் மகன், கௌரி எனது அக்கா வேல்தாய் மகள் ஆவார். கண்ணன், சக்கரவர்த்தி எனது அக்கா வேல்தாய் மகன்கள் ஆவார்கள். ராமலட்சுமி, சீத்தாலட்சுமி, மகாலட்சுமி எனது மற்றொரு அக்காவான ராமசுப்பம்மாளின் பிள்ளைகள் ஆவார்கள். எனது அப்பா பெயர் சுப்பைய நாயக்கர் என்றால் சரிதான். எனது அம்மா பெயர் லட்சுமியம்மாள் என்றால் சரிதான். சுப்பைய நாயக்கர் எப்போது இறந்தார் என்றால் 2006 ம் ஆண்டு நினைக்கிறேன். எனது அம்மா எப்போது இறந்தார் என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கில்எ னது பெற்றோரின் இறப்பு சான்றிதழ்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கான சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.34/3 ஆகும். நான் ஐந்து சொத்துக்களுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்கள்.34/3, 73/1, 116/3, 73/2, மற்றொரு சொத்து ஞாபகமில்லை. மேற்படி சொத்துக்கள் ஆதியில் எனது தகப்பனார் வழி சொத்தாகும், 2003 ம் ஆண்டு நான் சாத்தூரில் வசித்து வந்தேன் என்றால் சரியல்ல. மடத்துப்பட்டியில் தான் வசித்து வந்தேன். அப்போதே பாகப்பிரிவினை பத்திரம் பற்றி எனக்கு தெரியும் என்றால் அப்போது தெரியாது. பாகப்பிரிவினை பற்றி எனக்கு தெரியும் என்றாலும், நான் வேண்டுமென்றே தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நாங்கள் தாவா சொத்தை கூட்டு குடும்பமாக அனுபவித்து வருகிறோம். தாவா சொத்துக்களை நாங்கள் அனுபவித்து வருவதாக ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்தை நான் அனுபவம் செய்ததாக ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை யார் எழுதி வாங்கியுள்ளார் என்றால் கீதா எழுதி வாங்கியுள்ளார்.

சார்பதிவாளர் அலுவலகத்தில் கீதாவிடமிருந்து முறையான ஆவணங்களை பெற்று வழிகாட்டுதல் முறைப்படி பதிவு கட்டணம் பெற்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மாவட்ட பதிவாளரையோ, மாவட்ட ஆட்சி தலைவரையோ தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் முறையான நீதிமன்ற கட்டணம் செலுத்தாத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 13ம் பிரதிவாதி தனது கடமைகளை சரிவர செய்துள்ளார் என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை

பிராதில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதில் உள்ள சங்கதிகளை எனது வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேன். பிராதில் எத்தனை அயிட்ட சொத்துக்களை சொல்லியுள்ளேன் என்றால் ஐந்து அயிட்ட சொத்துக்களை சொல்லியுள்ளேன். அந்த விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சொத்து விபரங்கள் சர்வே எண்கள்.34/3, 73/1, 73/2, 742, 643 ஆகும். சர்வே எண்.34/3 க்கான நான்கு மால்கள் என்ன என்றால் எனக்கு சரியாக படிப்பறிவு இல்லாத காரணத்தினால் எந்தெந்த சர்வே எண்களுக்கு என்னென்ன மால்கள் என்று சரியாக சொல்ல முடியாது. சுப்பாநாயக்கருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் என்னையும் சேர்த்து ஐந்து பேர்கள் ஆகும். எனது தகப்பனார் சுப்பாநாயக்கர் எப்போது காலமானார் என்றால் 1986ல் காலமானார். எனது தகப்பனார் இறந்த ஒரு சில ஆண்டுகளிலேயே எனது தாயாரும் இறந்துவிட்டார் என்றால் 2006ம் ஆண்டு இறந்துவிட்டார். பிராது தபசில் சொத்து எனது தகப்பனார் சுப்பாநாயக்கருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தகப்பனாரின் இறப்பிற்கு பின்னிட்டு நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் தாவா சொத்தை அனுபவித்தோம் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் இறப்பிற்கு பின்னிட்டு தாவா சொத்தை 1ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 12.01.2003ம் தேதி நான், எனது தாயார், 2ம் பிரதிவாதி பெருமாள்சாமி ஆகியோர்கள் சேர்ந்து 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து ஒரு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. அந்த விடுதலை

பத்திரத்தை நாங்கள் நல்ல மனநிலையில் 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துவிட்டு தற்போது வழக்கிற்காக விடுதலை பத்திரம் எழுதி கொடுக்கவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரயில்ல. எனது தகப்பனாரின் இறப்பிற்கு முன்னதாகவே 02.09.1967ம் ஆண்டு எனது தாயார் எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது தாயாருக்கு நான் தான் கடைசி வரை உணவு கொடுத்து பார்த்து வந்தேன். அதனால் எனது அம்மா எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார். அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் பற்றி பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி அவருடைய பெயருக்கு பட்டா மாற்றம் செய்வதற்காக வெம்பக்கோட்டை வட்டாட்சியருக்கு ஒரு மனு அனுப்பினார் என்றால் அந்த மனு பற்றி எனக்கு தெரியாது. அந்த மனு பற்றி எனக்கு நன்றாக தெரியும் என்றாலும், தெரிந்து கொண்டே வேண்டுமென தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த மனுவின் பேரில் அந்த விசாரணையில் நான் கலந்து கொண்டேன் என்றால் சரியல்ல. அந்த விசாரணையின் பேரில் 1ம் பிரதிவாதிக்கு பட்டா மாற்றம் செய்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதன்படி 1ம் பிரதிவாதி தான் 20 ஆண்டுகளுக்கு மேலாக தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. பிராதில் தபசில் சொத்தில் விவசாயம் செய்து அதில் வரும் விளை பொருட்களை நான் பெற்றுக்கொள்வதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் அனைத்து பொருட்களையும் எனது அண்ணன் தான் எடுத்து கொள்வார். 1ம் பிரதிவாதி தான் சொத்தை திருப்பி கேட்ட போது என்னை கொன்றுவிடுவதாக மிரட்டியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என்னை மிரட்டியதாக சொல்லியுள்ள நிலையில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்லுவது போல் 1ம் பிரதிவாதி மிரட்டவில்லை என்ற காரணத்தினால் தான் நான் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு நான் எனது தாயார் மற்றும் 2ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த விடுதலை பத்திரம் செல்லாது என்று நான் சொல்லுவது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. விடுதலை பத்திரத்தில் நான் கையெழுத்தே போடவில்லை. விடுதலை பத்திரத்தை அவருக்கு கொடுக்கவில்லை. இந்த வழக்கின்

1ம் பிரதிவாதி வழக்கின் 11ம் பிரதிவாதிக்கு தபசில் சொத்து குறித்து ஏற்படுத்தி கொடுத்த கிரையம் சட்டபடி செல்லும் என்றால் சரியல்ல. விடுதலை பத்திரத்தை எழுதிக் கொடுக்கவில்லை. இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி வழக்கின் 12ம் பிரதிவாதிக்கு தபசில் சொத்து குறித்து ஏற்படுத்தி கொடுத்த கிரையம் சட்டபடி செல்லும் என்றால் சரியல்ல. விடுதலை பத்திரத்தை எழுதிக் கொடுக்கவில்லை. 1ம் பிரதிவாதி தனது சொந்த செலவில் தான் எனக்கு திருமணம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது திருமணத்திற்கு 1ம் பிரதிவாதி 100 பவுன் நகை கொடுத்து திருமணம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கும் எனக்கும் ஏற்கனவே கருத்து வேறுபாடு உண்டு என்றால் சரியல்ல. இந்த நிலத்தை விற்ற பிறகு தான் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. எனக்கு சேர வேண்டிய சொத்திற்கு மேலாகவே எனது தாயார் தானசெட்டில்மெண்ட் மூலம் சொத்துக்களை கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எங்கள் தாயார் எனக்கு அதிகமாக சொத்து கொடுத்துள்ளதால் அதை 1ம் பிரதிவாதி கேட்டுவிடுவார் என்பதால் அவர் மீது இந்த வழக்கை நான் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரயில்ல. என்னுடன் பிறந்த ராமசுப்பம்மாள், வேல்தாய் ஆகியோர்கள் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். எனது தாயார் லட்சுமியம்மாளுக்கு பாத்தியப்பட்ட 4 ஏக்கர் 38 சென்டில் எனக்கும், எனது சகோதரி ராமசுப்பமாளுக்கும் 2 ஏக்கர் 38 சென்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 1 ஏக்கர் தான் எழுதிக் கொடுத்துள்ளார். எனது தாயார் எனக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் 1 ஏக்கர் நிலத்தை எழுதி கொடுத்ததாக பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஏற்கனவே எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பாகம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த 1 ஏக்கர் நிலம் எனக்கு எவ்வாறு வந்தது என்றால் அது எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். எனவே நான் எனக்குரிய பாகத்தை பெற்றுக் கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாயார் சொத்து எனக்கு கிடைத்தது. எனது தகப்பனாரின் சொத்தை கேட்டு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 2 ஏக்கர் 38 சென்ட் உடன் சேர்த்து மீதம் 2 ஏக்கர் கையிருப்பு நிலத்தையும் பழனிச்சாமி என்பவருக்கு விற்பனை கிரையம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சொத்து விபரங்கள் எல்லாம் எனக்கு தெரிந்த நிலையில் பிராது தபசில் சொத்திற்கான நான்குமால்கள் விபரங்களும் நன்றாக தெரியும் என்றால் சரியல்ல.

எனக்கு படிப்பறிவு இல்லாத காரணத்தினால் சொல்ல தெரியவில்லை. பிராதில் உள்ள விபரங்கள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் ஐந்தில் ஒரு பாகத்தை நான் ஏற்கனவே பெற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் இறப்புக்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதி தான் அனைத்து சொத்துக்களையும் அனுபவித்தார் என்றாலும், நாங்கள் இந்த சொத்துக்களை அனுபவிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நாங்களும் அனுபவித்தோம். 2003ம் ஆண்டு எனது தாயாரும், 2ம் பிரதிவாதியும் சேர்ந்து 1ம் பிரதிவாதிக்கு ஒரு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2003ம் ஆண்டு பாக விடுதலை பத்திரத்தை 1ம் பிரதிவாதிக்கு எனது தாயாரும், 2ம் பிரதிவாதியும் எழுதிக் கொடுத்தது எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக எனக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி, 11 மற்றும் 12 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் 1, 12 மற்றும் 13ம் பிரதிவாதிகளை தவிர மற்றவர்கள் இந்த வழக்கை நடத்தவில்லை என்றால் அது அவர்களது விருப்பம். நான் பாகம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 1, 12 மற்றும் 13ம் பிரதிவாதிகளை தவிர மற்றவர்கள் எனக்கு ஆதரவாக உள்ளதால் அவர்கள் இந்த வழக்கை நடத்தவில்லை என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 12ம் பிரதிவாதி தன்னுடையதாக ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.